பக்கங்கள் எட்டு
விலை ரூபா: **5.00**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறை படிப்பகம்

# வலம்புரி
## VALAMPURI

**லாலாசோப்**
சண்சயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
**வேணிகளஞ்சியம்**
கே. கே. எஸ. வீதி,
யாழ்ப்பாணம்.
லாலா சோப்தொழிற்சாலை
அச்சுவேலி.
(கி 899)

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 12 சனிக்கிழமை (28-10-2000) தொ. பேசி 3378 ஒலி: 313

## ★ பண்டாரவளைப் படுகொலைகள்
# கருகியநிலையில்சடலங்கள்
# இனம் காண்பதில் சிக்கல்!

### 110பேர் தொடர்ந்தும் தடுத்துவைப்பு

(பண்டாரவளையிலிருந்து நமதுநிருபர்)

கடந்த புதன்கிழமை அதிகாலை பண்டாரவளை புனர்வாழ்வு நிலயத்தில் இடம் பெற்ற படுகொலைகள் நன்கு திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட காட்டு மிராண்டித்தனமான சம்பவம் என்று மனித உரிமை அமைப்புகள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

இப்படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக குற்றத்தடுப்பு பணியக பொலிஸ் பிரிவினர் தீவிர விசாரணையின் பொருட்டு பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்திற்குச் சென்று ஐந்து நாட்கள் அங்கு தங்கி இருந்து விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட பின் சடலங்களை அடையாளம் காண்பதைத் தடுக்கும் நோக்குடன் அவற்றையெரித்துமுள்ளார்கள்.

சடலங்கள் எரிக்கப்பட்டமையினால் அவற்றை இனம் காண்பதற்கு கொழும்பு ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள போதிலும் அவை இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. இதனைத்தொடர்ந்து சடலங்கள் அடையாளம் காணும் பொருட்டு தியத்தலாவ அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த இளைஞர்

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். இளைஞர்களின் ச_லங்கள்
## விமான மூலம் எடுத்து வரப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் கோரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களின் சடலங்கள் விமான மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு யாழ் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

செல்வராஜா துரைராஜா கும்பலை, அளவெட்டி சிவஞானசுந்தரம் சிவருபன் ஏழாலை மேற்கு சுன்னாகம் ஆகியஇருவரின் சடலங்களுமே

(8ம் பக்கம் பார்க்க)

## சுதந்திர ஆணைக்குழு மூலம் விசாரணை நடத்தவேண்டும்
### ரணில் அரசிடம் கோரிக்கை

## புலிகளின் தரபபில் ஒருவர் உ'ரிழப்பு

[வவுனியா]

புலிகளின் சாஸ்ஸ் அன்ரனி சிறப்பு படை தளபதி லெப்டினன் கேணல் சேகர் (பணிக்கண்டி ஜெயக்குமார் கிளிநொச்சி) உயிரிழந்துள்ளார் என புலிகளின் குரல் தெரிவித்துள்ளது.

கடந்த 18 ஆம திசதி இராணுவத்தினருடனான மோதலில் காயமடைந்து சிகிச்சை பெற்றபோதே இவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. [ம]

## ★பண்டாரவளை கொலை
## முகாம் அதிகாரி கைது
## விசாரணைகள் ஆரம்பம்!

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துலோயா புனர்வாழ்வு நிலய தாக்குதல் குறித்து, குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

புனர்வாழ்வு நிலையத் தாக்குதல் குறித்து ஏற்க

(8ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் இரு பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்

(வவுனியா)

பண்டாரவளை புனர்வாழ்வு நிலையபடு கொலைச் சம்பவத்தை கண்டித்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் இரு கண்டன ஊர்வலங்கள் நேற்று முன்தினம் வெகுஜன அமைப்புக்களினால் நடத்தப்பட்டது.

மல்லாவி புதுக்குடியிருப்பு

(8ம்பக்கம் பார்க்க)

## கொடிய யுத்தத்தை நிறுத்த வெகுஜன இயக்கம் அழைப்பு!

(கொழும்பு)

அரசியல் மயப்படுத்தப்பட்டசிங்களபேரினவாதம்மதவாதிகளின் பக்க பலத்துடன் டன் தமிழ் மக்களுக் எதிராக திணித்துள்ள கொடிய யுத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டுமென வெகுஜன இயக்கம் வேண்டு கோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அவ்வ

(8ம்பக்கம்பார்க்க)

## ★ பண்டாரவளை புனர்வாழ்வு முகாம் கொலை
## வவு. மன்னார் இளைஞர்களின்
[illegible]

(கொழும்பு)

பண்டாரவளைபுனர்வாழ்வு முகாமில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமையானது அரசாங்கத்தின் மீது வடபகுதி இளைஞர்கள் வைத்துள்ள நம்பிக்கையை சீர்குலைத்துள்ளது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று விடுத்துள்ள

(8ம் பக்கம் பார்க்க)

# பண்டாரவளை தாக்குதல் 16காவலர் வேலைநீக்கம்

(பண்டாரவளை)

பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் கடந்த புதன்கிழமை அதிகாலை இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தை அடுத்து அங்கு காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராண்டு இராணுவத்தினரும் 14 பொலிசாரும் வேலைநீக்கம் செய்யப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடந்த தினத்தன்று காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இந்த16பேரும் மேல் விசாரணைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

(வ)

# ஹர்த்தால் ஏற்பாடு செய்த 7பேர் திருமலையில் கைது!

பண்டாரவளை படுகொலையை க்ண்டித்து திருமலையில் ஹர்த்தாலை ஒழுங்கு செய்து நடாத்திய ஏழு தமிழ் இளைஞர்களை பொலிசார் நேற்று கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இந்த ஏழு இளைஞர்களும் பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வு பொலிசாரால் தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இதுவரை இவர்கள் விடுவிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

(வ)

# சடலம் உறவினர்களிடம் ஒப்படைப்பு

(வவுனியா)

பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் வைத்து கோரமாக வெட்டி கொலை செய்யப்பட்ட மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த மூன்று இளைஞர்களின் சடலங்களை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைப்பதற்காக வவுனியா பதில் அரச அதிபர் சி. ரகுநாதபிள்ளையிடம் இராணுவத்தினர் கையளித்துள்ளனர்.

வவுனியா பிரதேச செயலர் இமல்டா சுகுமார், இலங்கை செஞ்சிலுவை சங்க, சர்வதேச செஞ்சிலுவை சங்க வவுனியா கிளை பிரதிநிதிகள், மனித உரிமைகளுக்கான வவுனியா மாவட்ட பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் சடலங்கள் உறவினர்களிடம் அவர்களது வீடுகளில் வைத்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வவுனியா வேப்பங்குளத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம்

(8ம் பக்கம் பார்க்க)

# அனுராவின் மெய்ப்பாதுகாவலர் நேற்று முன்தினம் சுட்டுக்கொலை

(கொழும்பு)

பதினோராவது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகர் அனுரா பண்டநாயக்காவின் மெய்ப்பாதுகாவலர் ருவர் நேற்று முன்தினம் இனம்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ராகம பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9-00 மணி

(8ம் பக்கம் பார்க்க)

## பண்டாரவளை சம்பவத்தைக் கண்டித்து

# யாழ்ப்பாண குடாநாடு பூராகவும் இன்று பூரணதுக்கம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் வெட்டிக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இன்று யாழ். குடாநாடு முழுவதும் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பு மேற்கொண்டுள்ளது.

இத்துக்கதின அனுஷ்டிப்பிற்கு பொது அமைப்புக்கள் வர்த்தக நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள்

( 8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள்

## சிறு விளம்பரம்

### தவறி விட்டது

35 3இலந்தைக்குளம வீதி கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தை முகரியாகக் கொண்ட அருமைத்துரை சயிலரூபன் என்பவரின் விஷேட அடையாள அட்டை இல 0901034470 யாழ். நகரில் பூபாலசிங்கம் புத்தக சாலைக்கும் வைரவர்கோயில் பகுதிக்கும இடையில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தாழ்மையாக வேண்டுகின்றோம். (1864)

## பதவிஏற்பு

(கொழும்பு)

தொலைத் தொடர்பு அமைச்சின் செயலாளராக நேற்று ஜனதாவபீரிஸ் கடமையேற்றுள்ளார்.

இவர் ஆரம்பகாலத்தில் சோவித் நாடு எனும் சிங்கள இதழ் ஆசிரியராகவும், 1971 ஆம் ஆண்டு இலங்கை கூட்டுத்தாபன செய்திப்பிரிவு ஆசிரியராகவும், பிரதம ஆசிரியராகவும், 1994 ஆம் ஆண்டு இலங்கை தொலைக்காட்சி பணிப்பாளராகவும், தலைவராகவும் கடமையாற்றினார்.

இவர் எம். ஏ பட்டதாரியாவார். (க-த)


### VACANCIES
### UNIVERSITY OF JAFFNA
### SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 24th November 2000 for the undermentioned posts for Diploma Course in Physical Education.

1. **Visiting Lecturer in Physical Education**
   - ( ) Principal of Physical Education
   - (b) Physical Education Management
   - (c) General Theory and Method of Training
   - (d) Physical Education and Sports Psychology
   - (-) Physical Education Statistics

2. **Visiting Instructor in Physical Education**
   - (a) Athletics
   - (b) Gymnastics and Marching
   - (c) Soccer


# பண்டாரவளைச் சம்பவம்
# சோகத்தில் ஆழ்ந்தது மட்டுநகர்

(மட்டக்களப்பு)

பண்டாரவளையில் நடைபெற்ற சம்பவத்தில் பலியானவர்களில் அதிகமானவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து மட்டு.நகர் சோகத்தில் மூழ்கி உள்ளது.

நேற்று பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. போக்குவரத்துச் சேவைகள், வர்த்தக நிலைய விற்பனைகள், கல்விச்செயற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை. நகரெங்கும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

இச்சம்பவத்தையடுத்து மரணமானோரின்உடல்களை மட்டக்களப்பிற்கு கொண்டு வருவதில் பெரும் இடஞ்சல் ஏற்படுவதாக உறவினர் மத்தியில் பலத்த அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-த

## மூக்குக் கண்ணாடி அன்பளிப்பு

(மந்திகை)

வடமராட்சி லயன் கழகத்தினர் இப்பகுதியிலுள்ள அங்கவீனர்களுக்கும், வறிய குடும்பங்களுக்கும் சுயதொழில் முயற்சிக்கான அன்பளிப்புப் பணம், மூக்குக் கண்ணாடி என்பவற்றையும் வழங்கவுள்ளனர்.

இன்று 28 ஆம் திகதி லயன் சோமசுந்தரம் தலைமையில் மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளது.

லயன் பிராந்திய தலைவர் வைத்திய கலாநிதி லயன் வி. தியாகராஜன் இந் நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த-32)

# மட்டக்களப்பு அபிவிருத்தி விரைவில் மாநாடு

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தினை முழுமையாக அபிவிருத்திசெய்வது தொடர்பான உயர்மட்ட மாநாடுவிரைவில் நடத்தப்படவுள்ளது.

பல்வேறு புறக்கணிப்புக்கு ஆளாகி வரும் மட்டக்களப்பு மாவட்டத்தினை முழுமையான அபிவிருத்தியடைந்ததோர் பிரதேசமாக மாற்றுவதே இம் மாநாட்டின் நோக்கமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. [உ-60]

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவி இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக தரப்படுகின்றது.

### சங்கானை

| | |
|---|---|
| 155412 ஏ | 160547 ஏ |
| 160547 பி | 160638 ஏ |
| 160639 ஏ | 161887 ஏ |
| 161888 ஏ | 165619 ஏ |
| 165619 பி | 165628 ஏ |
| 165612 ஏ | 165642 பி |
| 165645 சி | 165642 டி |
| 165642 ஈ | 165642 எவ் |
| 165642 ஜி | 165713 ஏ |
| 165756 ஏ | 165800 ஏ |
| 165824 ஏ | 165824 பி |
| 165889 ஏ | 165899 பி |
| 165899 சி | 165899 டி |
| 165909 ஏ | 165909 பி |
| 165909 சி | 166523 ஏ |
| 166523 பி | 166529 ஏ |
| 166530 ஏ | 166591 ஏ |
| 166591 பி | 166713 2 |
| 166740 ஏ | 166741 ஏ |
| 166789 ஏ | 166823 ஏ |
| 168993 ஏ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 156556 ஏ | 156556 பி |
| 159229 ஏ | 159267 ஏ |
| 159267 பி | 159267 சி |
| 15 269 ஏ | 159269 பி |
| 159269 சி | 159269 டி |
| 159308 ஏ | 159308 பி |
| 159406 ஏ | 159406 பி |
| 159406 சி | 161128 ஏ |
| 161128 பி | 161171 ஏ |
| 161171 பி | 161224 ஏ |
| 161224 பி | 161263 ஏ |
| 161263 பி | 163191 ஏ |
| 163191 பி | 163191 சி |
| 163191 டி | 163 91 ஈ |
| 163192 ஏ | 163192 பி |
| 163192 சி | 163192 டி |
| 163263 ஏ | 163290 ஏ |
| 163386 ஏ | 163532 ஏ |
| 163589 ஏ | 163489 பி |
| 163624 ஏ | 163654 பி |
| 163624 சி | 163624 டி |
| 165949 ஏ | 166085 ஏ |
| 166085 பி | 166086 ஏ |
| 166171 ஏ | 166171 பி |
| 166172 ஏ | 166272 பி |
| 166172 சி | 166162 டி |
| 166162 ஈ | 166303 ஏ |
| 166325 ஏ | 168597 ஏ |

# செய்திக்கு அமைச்சர் மறுப்பு

(கொழும்பு)

# பொதுமக்கள் சிரமம்

(ஈச்சமோட்டை)

யாழ் நகரின் மத்திய பகுதியில் பிரதான கொட்டடி மீன் சந்தையில் மக்கள் கூட்டம் அதிகமாக கூடுவதினால் அப்பகுதியினூடாக செல்லும் வீதியில் போக்குவரத்து செய்வதில் பாதைசாரிகள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சந்தை கூடும்நேரத்தில் வியாபாரிகளும். நுகர்வோரும் தமது வாகனங்களை வீதியின் இரு மருங்கிலும் நிறுத்துவதினாலும் வீதியோரத்தில் வியாபாரம்

# இராசி பலன்

28.10.2000

(ஐப்பசி12 சனி)

பிரதமை பி.ப.2.00வரை
சுவாதி மு.ப.8.14 வரை
ராகு காலம் 9.03 - 10.33
சுப நேரம் 3.03 - 4.33
கந்த சஷ்டி விரதாரம்பம்
அமிர்த சித்தம்

★ **மேடம்** போசன சுகம், பிரயாணம், சுவாரஸ்யம், தேவையற்ற பயம்.

★ **இடபம்** தனவரவு, சத்துருஜெயம், சுக வாழ்வு, சந்தோஷமான செய்தி.

★ **மிதுனம்** குடும்பக்கவலை, காரிய இடையூறு, தாழ்வு நிலை.

★ **கடகம்** உறவினர் வெறுப்பு, தன் நம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், காரியம்தாமதம்.

★ **சிங்கம்** சகோதரர் உதவி. பிரயாணம், சந்தோசமான நிகழ்வு, தனவரவு.

★ **கன்னி** தனவிரயம், கௌரவக் குறைவு, விதண்டாவாதம், காரியத்தாமதம்.

★ **துலாம்** புதிய பொருள் சேர்க்கை, உடல் நலம், புதிய சிந்தனை, போசன சுகம்.

★ **விருச்சிகம்** காரியம் தாமதம், சயன சுகக் குறைவு, சுபகாரியச் செலவு, கோபப்படுதல்.

★ **தனுசு** தனவரவு, கீர்த்தி, உறவினர், நண்பர்கள் சந்திப்பு, மன மகிழ்ச்சி.

★ **மகரம்** நினைத்த காரியம் கை கூடும், தொழில் அதிகாரம் பணிவிடை.

★ **கும்பம்** பிரயாணம், கட்டுப்படுதல், உடல் உபாதை, வீண்பயம்.

★ **மீனம்** எதிர் பாராத விரோதம், சிறுவியாதி, காரியம்தாமதம், விபத்து.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன

# பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

(d) Net Ball
(e) Table Tennis
(f) Volley ball
(g) Cricket
(h) Hockey
(i) Basket ball
(j) Badminton

| POSTS | SALARY SCALE |
|---|---|
| Visiting Lecturer | 300/- per hour |
| Visiting Instructor | Rs 150/- per hour |

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Lecturer/ Establishments University of Jaffna, Sri Lanka either in person or by sending a Money Order for Rs. 20/- per form. Those who wish to obtain application from by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the 'Bursar, University of Jaffna' together with a self addressed stamped envelope 23x10cm in size.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Application received after the closing date will be rejected without intimation.

REGISRTRAR
University of Jaffna
Sri Lanka.
25th October 2000

[கி-980]

(கொழும்பு)

அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, தான் பிரதி பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றதாக வெளியான செய்திகளை மறுத்துள்ளார்.

மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சராக உள்ள ஜெனரல் அனுருத்த ரத்வத்தை பாதுகாப்பு பிரதியமைச்சராகப் பதவியேற்றார் என்று சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

மேற்சொன்ன செய்தியை மறுத்துள்ள ரத்வத்தை இது விடயம் தொடர்பாக எந்தவொரு செய்தி நிறுவனத்திற்கும் எந்தவிதமான தகவல்களும் தன்னால் வெளியிடப்படவில்லை எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# செயலமர்வு

(கோப்பாய்)

கோப்பாய், கிறிஸ்தவ கல்லூரியிலும், அச்சுவேலி புனித திரேசா மகா வித்தியாலயத்திலும் தரம்1, தரம்2 மாணவர்களுக்கான செயலமர்வு நடைபெறவுள்ளது,

நாளை 29 ஆம் திகதி நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வு அவ்வப் பாடசாலைகளில் இடம்பெறுமெனத்தெரிவிக்கப்படுகிறது.

(த-79)

வீதியோரத்தில் வியாபாரம் செய்பவர்களாலும் போக்குவரத்திற்கு நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்போக்குவரத்து நெரிசல் காரணமாக விபத்துக்கள் ஏற்படும் அபாயம் அதிகரித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

[க-59-4]

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட தாச்சிச்சங்கம் நடாத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டிகளின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞானப்பிரகாசர் விளையாட்டு மைதானத்தில் நாளை கலை சங்கத்தலைவர் கா. பீதாம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(வ)


## அறிவித்தல்

சாவகச்சேரி லயன்ஸ் கழகம்
மாவட்டம் 306 பி இலங்கை.

**பிராந்தியத் தலைவர் வருகை**

இடம்:- **லயன்ஸ் கழகம் மானிப்பாய் பரீஸ்**
காலம்:- **29-10-2000 மு.ப. 11:00** [நியமநேரம்]

பிரதம விருந்தினர்:-

**லயன் டாக்டர் தியாகராஜா ஜே.பி,**
[பிராந்தியத் தலைவர், பிராந்தியம்-09]

குறிப்பு:- மேற்படி நிகழ்வில் எமது கழக அங்கத்தவர் அனைவரையும் தவறாது சமுகமளித்துதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(க-981)

# பண்டாரவளைப் படுகொலை; அமைப்புகள் கண்டனம்

## த. வி. கூட்டணிப்பிரமுகர் ஆர்.சம்பந்தன்

பண்டாரவளையில் இடம் பெற்ற படுமோசமான படுகொலைச்சம்பவத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக்கண்டிக்கின்றது.

மேற்கண்டவாறு அக்கட்சியின் பொதுச் செயலர் ஆர். சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட 25 தமிழ்க்கைதிகள் கொல்லப்பட்டதும் மேலும் பலர் கடுகாயத்திற்குள்ளானதும் துர் அதிஷ்டமானதே.

கனரக ஆயுதங்களால் இக்கைதிகள் தாக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

குறிப்பிட்ட முகாமிற்கு வெளியே உள்ளோரே இத்தாக்குதலிற்கு திட்டமிட்டதாக அறியப்படுகிறது

எனினும்பாதுகாப்புப்படையினரைக் கண்டதும் தாக்குதலில் ஈடுபட்டோர் ஓடிவிட்டதாக அறியப்படுகிறது. ஆனால் பண்டயினர் தாமதமாக குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்த காரணம் பற்றியும் நோக்க வேண்டியுள்ளது

இச்சம்பவம் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படுவது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணமானோர் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு அரசாங்கம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மாநகரசபை உறுப்பினர் தங்க முகுந்தன்

பண்டாரவளைபுனர்வாழ்வு முகாமில் தமிழ்க் கைதிகள் 25பேர் படுகொலை செய்யப்பட்டதும்,20பேர்படுகாயமடைந்ததும் இந் நாட்டின் நீதிக்கும் உயிர் வாழும் அடிப்படை உரிமைக்கும் இடமிருக்கிறதா என்ற சந்தேகத்தை எழ வைக்கிறது,

யாழ். மாநகர சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் தங்கமுகுந்தன் பண்டாரவளைபடுகொலைச் சம்பவம் குறித்து வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நீண்டகாலமாக விசாரணைகள் எதுவுமின்றி தடுப்புக் காவலிலுள்ள தமிழ்க் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு தரப்பில் செய்தி வெளியிடப்பட்ட ஒரு சில தினங்களுள் இச் சம்பவம் இடம்பெற்றது வேதனை தருவதொன்றாகும்.

சுதந்திரமடைந்த நாள் முதல் ஆட்சிபுரிந்த அரசுகளின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளால் பாதிப்படைந்து வரும் தமிழ்ச் சமூகம் சொல்லொணாத வேதனைகளையும் சோதனைகளையும் தொடர்ந்து முகம் கொடுத்து வருகின்றது.

புதிய நாடாளு மன்றத் தேர்தலின் பின் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பத்திரி... விற்கும் உலக அரங்கில் திகழ்கிறது.

நாட்டின் தலைவி என்ற வகையிலும் பாதுகாப்பு அமைச்சுக்கும் பொறுப்பானவர் என்ற வகையிலும் ஜனாதிபதி இந்தப் பாவச் செயலுக்கு என்ன காரணம் கூறப் போகின்றார், என அறிய விரும்புவதுடன் இறந்தவர்களின் உறவினர்களுக்கும் அப்பாவித் தாய் தந்தையருக்கும் எந்த வகையில் நியாயம் வழங்க இருக்கின்றார் என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

கடந்தகால ஆட்சியில் காணாமல் போன அல்லது கொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கு எதுவித நியாயமான பதிலும் அளிக்காத ஜனாதிபதி அவர்கள் தொடர்ந்தும் இப்பதவியில் இருந்தால் நாடுமிகவும் மோசமான நிலைக்குப்போவதுடன் மக்கள் உயிர் வாழும் உரிமையும் கேள்விக்குறியாகிவிடுமென அஞ்சுகின்றேன்.

பௌத்த தர்ம போதனைகளைத் தெளிவாக அறிந்தவர்கள் ஒரு போதும் இப்பேர்ப்பட்ட அரக்க செயல்களை செய்ய முன்வர மாட்டார்கள் இனவாதத்தைத் தூண்டிவிடும் பௌத்த மகா சங்கங்களும் தலைவர்களும் இதற்கு என்ன நியாயம் கற்பிக்கப் போகின்றார்கள்? அடிப்படை உரிமைகள் மீதே

## புதிய ஜனநாயகக் கட்சி

இலங்கையின் பேரினவாத வெறிகொண்ட சக்திகள் மீண்டும் ஒரு கொலைக் களத்தை பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் நடத்தி தமது காட்டுமிராண்டித் தனத்தை உலகின் முன் காட்டியுள்ளன. இப்படு பாதகச் செயலை எத்தகைய கும்பல் செய்திருப்பினும் அதற்கான முழுப் பொறுப்பையும் பேரினவாதப் பேச்சுக்களை ஆவேசமாகப் பேசி வந்த அரசாங்கத் தலைவர்களும் ஐக்கிய தேசியக் கட்சி, சிஹல உறுமய போன்றவற்றின் பேரினவாதிகளும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும். இவ் அநாகரிகக் கொலை வெறியாட்டத்தை எமது புதிய ஜனநாயகக் கட்சி மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் மனித நேயத்தையும், மனித உரிமைகளையும், ஜனநாயகத்தையும் நேசிக்கும் அனைத்து சக்திகளும் இது போன்ற படுகொலைகளை எதிர்த்து அணி திரள வேண்டும் என வற்புறுத்துகின்றது.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழு சார்பாக கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் பண்டாரவளை புனர்வாழ்வு நிலையப் படுகொலை பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அன்று1983ன் வெலிகடைச் சிறைச்சாலைப் படுகொலைகளுக்குப் பின் நிகழ்ந்த சிறைச்சாலை, தடுப்பு முகாம் படுகொலைகளுக்கும் உரியவாறு பகிரங்க விசாரணைக் குழுக்கள் மூலம் விசாரணை நடத்தப்பட்டு அதன் குற்றவாளிகள் நீதி விசாரணை மூலம் தண்டிக்கப்பட்டிருந்தால் தற்போதைய கொலை வெறித்தாண்டவம் தடுக்கப்பட்டிருக்கும்.

பேரினவாத கொலைவெறியாட்டச் சம்பவங்கள் ஆளும் தரப்பினரால் தொடர்ந்தும் மூடி மறைக்கப்பட்டு வரும் போக்கினால் வெலிகடை, களுத்துறை, பண்டாரவளை மட்டுமன்றி மேலும் பல கொலைக் களங்கள் பெருகவே செய்யும்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ஈ. பி.ஆர்.எல். எவ் (வரதர் அணி)

(யாழ்ப்பாணம்)

பண்டாரவளை பிந்துலோயா படுகொலைச் சம்பவத்திற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [வரதர் அணி] தனது வன்மையான கண்டனத்தையும் அதிர்ச்சியையும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அவ் அமைப்பு மேலும் தெரிவிக்கையில்;

அரசை நம்பிச் சரணடைந்தவர்களைப் பாதுகாப்பது அரசின் தலையாய கடமையாகும். பாதுகாப்பு அரண்களுக்குள் உள்ளவர்களுக்கே அரசாங்கம் பாதுகாப்புஅளிக்கவில்லையென்றால், நாட்டு மக்களின் பாதுகாப்பை எப்படி அரசாங்கம் உத்தரவாதம் செய்யப் போகின்றது என்பதே இப்போது மக்கள் முன்னால் உள்ள கேள்வியாகும்.

இத்தகைய சம்பவங்களுக்கு உடனடியாக அரசு முடிவு காணாவிட்டால், இனவாதங்கள் கட்டுப்பாடற்று தலை விரித்தாடுவதும், காட்டுமிராண்டித் தனமான இனப் படுகொலை நிகழ்ச்சிகள் இடம் பெறுவதும் தவிர்க்க முடியாததாகும்.

அரசாங்கம் படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு விஷேட நஷ்ட ஈடு வழங்குவதோடு, காயம் அடைந்தவர்கள் குணப்பட தீவிர வைத்திய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

## ஜே. வி. பி. தெரிவிப்பு

பண்டாரவளை பிந்துலோயா புனர்வாழ்வு நிலையத்தில் இருந்த தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டமைக்கு மேற்படி நிலைய... களே என்பதை நாம் அறிவோம். என ஜே. வி பி. இயக்கம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது

## நாளை அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் அவசர கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கொட்டடியில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் தலைவர் எஸ் கதிர்காமத்தம்பி தெரிவித்துள்ளார்

அனைத்து உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வது அவசியம் என தலைவர் தெரிவித்துள்ளார். (க-77)

## மட்டு. அரச அதிபர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

பண்டாரவளை பிந்துலோயா புனர்வாழ்வு நிலையத்தில் பலியான மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்களின் குடும்பங்களிற்கு, மட்டக்களப்பு மாவட்ட செயலக புனர்வாழ்வுப் பகுதியூடாக தலா 12 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதுகுறித்த அறிவிப்பினை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ மௌன குருசாமி வெளியிட்டுள்ளார்.

படுகொலை செய்யப்பட்டவர்களில் ஐவர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், இவர்களது சடலங்கள் இன்று சனிக்கிழமை மட்டக்களப்புக்கு கொண்டுவர ஏற்பாடாகியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேற்படி மரணமடைந்தவர்களுக்கென வழங்கப்படும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு ஏதுவாக இன்று மாவட்டச் செயலகம் திறந்திருக்கும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-60)

## ஸ்கந்தாவில் பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி நிறுவுநர் தினமும் பரிசளிப்பு தினமும் நாளை 29 ஆம் திதி காலை 9.30 மணிக்கு ஒரேற்றர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வு இக் கல்லூரி அதிபர் க. சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர் உரையை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேலும், ஆசியுரையை தெல்

ணத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் நிமலராஜனின் கோரக் கொலையின்பின் பண்டாரவளையில் இடம் பெற்ற கொன்றொழிப்பும் இந்நாடு பழிச்சொல்லுக்குள்ளாக்கப்படுமளவிற்கும் நம்பகத்தன்மையற்ற நிலைக்கு இந்த அரசு உதாசீனப்படுத்தப்படுமளவு அடிப்படை உரிமைகள் மீதே அராஜகம் பண்ணும் அரசும் மக்களும் அவர்களுக்குத் துணை போவோரும்என்றோ ஒரு நாள் நீதிக்கும் தர்மத்துக்கும் பதில் கூறியே ஆக வேண்டும். இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தமிழீழ விடுதலை இயக்கம்

(யாழ்ப்பாணம்)

பண்டாரவளை படுகொலைச் சம்பவம் குறித்து நாம்அதிர்ச்சியும், கவலையும் அடைகின்றோம். இவ்விடயம் தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படல் வேண்டும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவிற்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டோருக்கு போதிய மருத்துவ வசதிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மட்டு எம். பி. மகஜர்

(மட்டக்களப்பு)

பண்டாரவளையிலுள்ள பிந்துலோயா புனர்வாழ்வு நிலையத்தில் இடம் பெற்ற தமிழ் இளைஞர்கள் படுகொலை தொடர்பாக உடன் நீதியான பூரண விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கோரும் அவசர தொலை நகல் செய்தியொன்றினை மட்டு.மாவட்டஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சோ. கணேசமூர்த்தி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதே வேளையில் மட்டு. மாவட்ட ஐக்கிய ஊடகவியலாளர் அமைப்பு இச்சம்பவம் குறித்த தனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளது. (உ-60)

மைக்கு மேற்படி நிலைய அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும். கிராம மக்களை தூண்டிவிட்டு இக்கொலையைப் புரிந்தவர்கள் அவர்

இதை விட மோசமான பல சம்பவங்கள் இன்னும் இடம் பெற வாய்ப்புண்டு என்றும் தெரிவித்துள்ளது. (உ)

## மனித கௌரவ மன்றம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

மிருகங்களை கொல்வதற்கு பயப்படுவதை மீறி மனிதனை மிருகத்துக்கு கேவலமாக வெட்டியும், அடித்தும் கொலை செய்து விட்டுஅவர்களின் குடும்பத்துக்கு நஷ்டஈடு வழங்குவது மட்டுமல்லாது இனிஇவ்வாறு நடக்காது பார்க்க வேண்டியது சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் கடமையாகும். இப்படியாக கொடூரங்கள் நடக்காது பார்க்க வேண்டும் என அமைச்சுகளுக்கு பகிரங்கமாக கோரிக்கை விடுகிறோம். (க)

## கரையோரப் பகுதிகளில் விமானம் நோட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடா நாட்டின் கரையோரப் பகுதியில் தன்னியக்க விமானமொன்று நேற்று முன்தினம் நண்பகலுக்கு பின் சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை தாழப்பறந்து நோட்டமிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பூநகரி, கல்முனை, பாசையூர் கடற்கரைப் பகுதிகளிலேயே இவ்விமானம் நோட்டமிட்டதாகவும் இதன் பின்னர் அப்பகுதியினை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

லிப்பழை துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் நடத்தவுள்ளனர். (த)

## அடையாள அட்டை வழங்கல்

(மட்டக்களப்பு)

காத்தான்குடியின் வரலாற்றில் முதன் முறையாகத் தாபிக்கப்பட்டுள்ள காத்தான்குடி தொழிலாளர் சங்கம் தொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்டு உத்தியோகபூர்வ அங்கத்தவர் அடையாள அட்டை வழங்கும் வைபவம் நேற்று தொழிலாளர் சங்கத்தின் பணிமனையில் நடைபெற்றது.

தொழிலாளர் சங்கத் தலைவர் என்.கே. லெப்பை தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய ஊடகவியலாளர் சங்கத் தலைவர் ரி. எல். ஜௌபர்கான் முக்கிய பிரமுகராக கலந்து கொண்டு அங்கத்தவர்களிற்கான அடையாள அட்டைகளை வழங்கினார்.

இவ்வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்ட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். (சு-60)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## சித்திரம் பகுதி - 1

நேரம்:- 1 மணி

ஆக்கம்:- திருமதி. S. பரமேஸ்வரன் ஆசிரியர்
(யாழ்.கலைகரத்தினம் ம. ம. வித்தியாலயம்)

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1) எருதின் உருவம் காணப்படாத சந்திரவட்டக்கல் எங்கே உள்ளது?

2) இத்தாலியிலுள்ள மன்னரின் ஓவியத்தை வரைந்த பிரபல்யமான கலைஞரின் பெயர் யாது?

3) கண்டிய காலப் பகுதியைச் சேர்ந்த புத்தர் சிலையில் கண்கள் எவ்விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன?

4) மகிந்தனின் இலங்கை விஜயம் பற்றிய ஓவியம்... எங்கே வரையப்பட்டுள்ளது?

5) இலங்கையில் நீர்க்குமிழி வடிவத்தில் அமைக்கப்பட்ட தாது கோபம் எது?

6) ஸ்பெயின் நாட்டின் சிறந்த குகை ஓவியம் எப் பெயரால் அழைக்கப்படும்?

7) கிறிம்சன் எனக் குறிப்பிடும் நிறம் யாது?

8) இந்தியாவின் எந்த மாநிலத்தில் அஜந்தாக் குகைகள் அமைந்துள்ளன?

9) முசமூடி போன்ற சிற்ப வேலைக்கு உகந்த மரம் எது?

10) அபயகிரி விகாரையின் உயரம் எவ்வளவு?

11) இலங்கையில் மிகப் பெரிய பௌத்த ஆலயம் எது?

12) இலங்கையில் காணப்படாத தாகர்ப்ப வடிவங்கள் எவை?

13) சித்தன்ன வாசல் சித்திரங்கள் எந்த அரசன் காலத்தவை?

14) எகிப்திய கல்லறையில் உள்ள சுவர்களில் எழுதப்பட்ட எழுத்துக்களை எவ்வாறு அழைப்பர்?

15) பியட்டா என்னும் சிலையை உருவாக்கியவர் யார்?

16) எகிப்திய பாலை வனங்களில் மிகவும் பிரமாண்டமான தோற்றத்தில் அமைந்திருக்கும் ஸ்பிங்ஸ் சிலை மனித முகத்துடன் மிருக உடலைக் கொண்டிருக்கும் அது எந்த மிருகத்தின் உடல்?

17) நின்ற நிலைப் புத்தர் சிலையிற் காணப்படும் முத்திரைக்கு வழங்கும் பெயர் யாது?

18) மறுமலர்ச்சிக் காலத்தில் ''ஆதாமின் படைப்பு'' என்னும் உட்புறக் கூரை ஓவியத்தைத் தீட்டியவர் யார்?

19) சித்திரக் கலையில் அச்சிடும் செயன் முறையை முதல் முதலில் அறிமுகப் படுத்திய தேசம் எது?

20) கோதமி விகாரையில் ஜோர்ஜ் கீற் அவர்கள் வரைந்த எந்த ஓவியம் கலைஞர் நவீன வடிவங்களைக் கையாண்ட விதத்தில் உணர்வு ரீதியில் வளம் மிக்கதாகக் காணப்படுகின்றது?

21) மட்டாண்டத் துண்டுகள், அழகிய கற்கள் என்பனவற்றைக் கொண்டு நிறைவேற்றப்பட்ட கலைப் படைப்புக்களை எவ்வாறு அழைப்பர்?

22) இத்தாலிய மறுமலர்ச்சிக் காலத்தில் பாறைகளின் கன்னி என்னும் படத்தை ஓவியமாகத் தீட்டியவர் யார்?

23) மாரன் சையில் துவக்குடன் சித்தரிக்கப்பட்டுள்ள உட் கூரை ஓவியம் எது?

24) உரோம் நகரிலுள்ள சிஸ்தயின் தேவாலயத்தில் மைக்கல் அஞ்சலோவின் சுவரோவியங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் மிகப் பெரிய சுவரோவியத்தின் பெயரைத் தருக.

# இல. போக்குவரத்து சபை மீண்டும் அமைக்கப்படும்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபை மீண்டும் தாபிக்கப்படுமென போக்குவரத்து அமைச்சர் 'விஜேக்குணவர்த்தன' தெரிவித்துள்ளார்.

இதற்கான முழுப் பணிகளையும் முன்னாள் போக்குவரத்துஅமைச்சர் [illegible] பௌசி ஆரம்பித்து...ளார்.

எனவே இந் நடவடிக்கைகளை தொடர்ந்து செய்வதில் ஆர்வமுடையவராக இருப்பதாகவும், பெருகிவரும் சனத்தொகைக்கும், மக்கள் நலனிற்கும் மேற்படி சேவை அமைக்கப்படல்அவசியம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# மலையக மக்கள் முன்னணி பிரமுகர் வேண்டுகோள்

பண்டாரவளை புனர் வாழ்வு முகாமில் நிராயுதபாணியான அப்பாவி தமிழ் இளைஞர்கள் மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டுள்ளதால் குமுறிப்போயுள்ள தமிழ்மக்களின் மனவேதனைக்குவடிகாலாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையை முழு மலையக மக்களும், அனைத்து தமிழ்மக்களும் துக்கதினமாக அனுஷ்டிக்க வேண்டுமென மலையக மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மலையகமக்கள் செறிவாக வாழுகின்ற பிரதேசத்தில் இச்சம்பவம் நடந்துள்ளதால் மக்கள் அதிர்ச்சியினால்ஸ்தம்பித்துப் போயுள்ளனர். நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் வரும் சோகச் செய்திகளும் எம்மோடு தொடர்பு கொள்பவர்களின் நெஞ்சத் துடிதுடிப்பும் மனதைப் பிழிகின்றன.

எனவே எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையை மலையக மக்களுட்பட அனைத்து தமிழ் மக்களும் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டு துக்க தினமாக அனுஷ்டிப்பதற்கு, மலையகத்திலுள்ள அனைத்து தொழிலாளர்களினதும், சமூகசேவை நிறுவனங்களினதும் பங்களிப்பினை கோருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெ. சந்திரசேகரன் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (க)

### ஈச்சமோட்டையில்

# குண்டு சத்தங்கள் மக்கள் பதற்றம்

[ஈச்சமோட்டை]

நேற்று மதியம் பாசையூர் பகுதியில் குண்டுச்சத்தங்களும், துப்பாகி வேட்டொலியும் பரவலாக கேட்ட வண்ணமிருந்தது.

இதனையடுத்து மேற்படி பகுதியை அண்டிய ஈச்ச மோட்டை பாண்டியன் தாழ்வு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் மிகுந்த பதற்றமடைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

ஆயினும், இராணுவத்தினர் குண்டுகள் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாலும், பயிற்சிகள் மேற்கொண்டதாலுமே இவ் வெடிச்சத்தங்களும் குண்டுச்சத்தங்களும் கேட்டதாக சிறிது நேரத்தில் அறிந்து கொண்ட மேற்படி பகுதி மக்கள் மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினர்.

[உ-59]

## பாப்பரசருக்கு வாழ்த்துச்செய்தி

(கொழும்பு)

பரிசுத்தபாப்பரசர் 2 ஆம் அருளப்பருக்கு இலங்கை ஜனாதிபதியும், பிரதமரும், வெளிவிகார அமைச்சரும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியுள்ளனர்.

இவர் இப் புனிதபதவிக்கு தெரிவாகி 22 வருடங்கள் பூர்த்தியானதை அடுத்தே மேற்படி வாழ்த்துச்செய்தி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(த)

# இலங்கையர் அனைவருமே வெளிநாட்டவர்களே

## மக்கள் விடுதலைமுன்னணி பிரமுகர்தெரிவிப்பு

(கொழும்பு)

இந் நாட்டில் வாழும்

25) மேலத் தேசங்களில் முதல் முதல் நாகரீக மடைந்த நாடு எது?

26) காந்தார சிற்பம் எந்த அரசன் காலத்தயது?

27) நவீன சித்திரங்களை வரைந்து உலகப் புகழ்பெற்ற ஓவியர் யார்?

28) எல்லோராவில் எத்தனை குகைக் கோயில்கள் உண்டு?

29) அஜந்தாக் குகை போல் வளர்ச்சியடைந்த குகை ஓவியம் எங்குள்ளது?

30) தனிப் பிரதி பெறும் அச்சுப்பதித்தல் முறையை எவ்வாறு அழைப்பர்?

31) தொலுவில புத்தர் வடிவத்தில் சித்தரிக்கப்பட்டிருக்கும் முத்திரை என்ன?

32) பொருட் சித்திரங்களை வரையும் போது எவ்விதம் வரைய வேண்டும்?

33) இந்துக் கோயில்களிற் காணப்படும் அசைவுறும் சிற்பத்தின் பெயர் என்ன?

34) எகிப்திய பிரமிட்டுக்களை விட உயர்ந்தது என வர்ணிக்கப்படும் கோபுரம் எது? எங்கே அமைந்துள்ளது?

35) இந்திய சாஞ்சிக் கல் ஓவியங்களை ஒத்த ஓவியங்கள் இலங்கையில் எங்கே அமைந்துளன?

36) முக்கோண வடிவ படிக்கல் அமைப்பு காணப்படும் விகாரை எது?

37) எப்பக்கே தேவாலயத்தின் மறு பெயர் என்ன?

38) 'பேய் நடனம்' என்ற ஓவியம் இன்னும் கலாபவனத்தில் காணப்படுகின்றது. இதனை வரைந்த ஓவியர் யார்?

39) தானியக் குவியல் வடிவ தாது கோபம் காணப்படும் விகாரை அமைந்துள்ள இடம் எது?

40) அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மைக்கல் அஞ்சலோவின் திட்டப்பட்ட ஓவியம் எனக்கருதப்படுவது எங்குள்ளது?

---

(கொழும்பு)

இந்நாட்டில் வாழும் தமிழர், சிங்களவர், இஸ்லாமியர் அனைவருமே வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வந்து குடியேறியவர்கள்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் கம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.

இந் நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் சமமானவர்கள். அனைத்து உரிமைகளும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கும் சமமாகவே வழங்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் நிலவும் இனபேதம், உடனடியாக களையப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் உடைக்கப்பட்டது

(தென்மராட்சி)

சுண்டுக்குளி சோமசுந்தரம் அவென்யூவில் இயங்கி வந்த மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய செயலகம் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டுள்ளது.

இங்கு இயங்கி வந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலகம் இவ்வருடம் ஏப்பிரல் முதல், யாழ். யுத்த நிலை காரணமாக சுழிபுரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதேவேளை இச் செயலகம் நவம்பர் முதலாம் திகதி முதல் மீண்டும் யாழ்ப்பாணத்தில் இயக்கவுள்ளதாகவும் அறியப்படுகின்றது. க-77

# கந்த சஷ்டி விரதம்

சுன்னாகம் தெற்கு பூதவராயர் ஆலயத்தில் கந்தசஷ்டி விரதம் விழாவாக கொண்டாடப்படவுள்ளதாக ஆலயத்தின் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

நாளை இவ்விரத அனுஷ்டானம் ஆரம்பமாக உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க.14)

## இன்று ஒரு தகவல்

# தன் குறையை தான் நிவர்த்தி செய்ய முயல வேண்டும்

ஒரு அழகிய கிராமத்தின் மத்தியில் ஆச்சிரமமொன்று. அவ் ஆச்சிரமத்தில் துறவியொருவர் வசித்து வந்தார். அவர் சமய அனுஷ்டானங்களை மிகவும் ஆர்வத்துடன் செய்து வந்தார்.

அவரின் ஆச்சிரமத்திற்கு அண்மையில் ஒரு விபச்சாரி வசித்து வந்தாள். அவளின் வீட்டிற்கு நிறையப் பேர் வந்து போயினர். துறவி இதை கண்டார். அவர் அந்த விபச்சாரியிடம் சென்று ''பெண்ணே நீ ஏன் இப்படிப் பாவங்கள் செய்கிறாய்! இந்தத் தொழிலை விட்டு விடு. இதனால் நீ நரகப் படுகுழியுள் விழ நேரும் என்றெல்லாம் உபதேசித்தார்.

ஆனால் விபச்சாரி தனது தொழிலை விடவில்லை. ஆனால் ஒவ்வொரு முறையும் தான் செய்த பாவத்திற்கு நொந்து கண்ணீர் விட்டு அழுது தனது பாவத்தினை மன்னிக்கும் படி இறைவனிடம் பிரார்த்திக்கலானாள்.

துறவியோ அவள் வீட்டிற்கு யாராவது சென்றால் எத்தனை பேர் அவள் வீட்டிற்கு வந்து போகிறார்கள் என்பதை கணக்கிட ஒவ்வொரு கல்லாக எடுத்து சேகரித்து வைத்துக் கொண்டார்.

நாட்கள் ஓடின, கற்களின் எண்ணிக்கையும் அதிகரித்தன ஒரு நாள் துறவி விபச்சாரியை அழைத்து கற்குவியல்களைக் காட்டி எச்சரித்தார்.

சில நாட்களின் பின் துறவியின் வாழ்நாள் முடிந்தது. அதே நாளிலேயே விபச்சாரியின் ஆயுளும் முடிவுற்றது.

துறவியை யமதூதர்கள் நரகத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆனால் விபச்சாரியையோ விஷ்ணு தூதர்கள் சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றனர்.

துறவி பெரும் வியப்படைந்தார். தன்னை நரகத்திற்கும் விபச்சாரியை சொர்க்கத்திற்கும் அழைத்துச் சென்றமை பற்றி தூதர்களிடம் வினாவினார்.

தூதர்கள் ''துறவியே நீ காவியுடை அணிந்திருந்தும் அவ்விபச்சாரி பற்றியும் அவள் செய்யும் பாவத்தைப் பற்றியுமே எண்ணி கற்களின் எண்ணிக்கை மூலம் அவளின் பாவத்தை கணக்கிட்டுக் கொண்டிருந்தாய் ஆனால் அவளோ தான்செய்யும் செயலையிட்டு மிகவும் மனம் வருந்தி இறைவனிடம் அழுது பிரார்த்தித்து அந்த தொழிலைச் செய்யும்போதும் இறைசிந்தனையிலே ஆழ்ந்திருந்தாள். அவரவர் எண்ணங்களின் படியே அவரவர் ஆகிறார்கள்'' என்று பதிலளித்தனர்.

உடலால் பாவம் செய்யாத துறவியின் உடல் வெகு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. விபச்சாரியின் உடலோ கழுகுகளிற்கும் காக்கைக்கும் உணவாகியது. ஆனால் மனதால் தூய்மையற்ற துறவி நரகத்திற்கும் இறை சிந்தனையில் இருந்த விபச்சாரி சொர்க்கத்திற்கும் அழைத்து செல்லப்பட்டனர்.

நாம் வாழும் வாழ்வில் மற்றவர்களுடைய குறைகளையும், நிறைகளையும் காண்பதைவிட எங்களிலுள்ள குறைகளைக்கண்டு அவற்றை நிவர்த்தி செய்து வாழ்ந்தால் அதுவே எமக்கு மறுமைப் பயனில் இன்பத்தை நல்கும்.

இராமகிருஸ்ணர்

# பண்டாரவளையை புலிகளிடம் ஒப்படைக்கமாட்டோம்! சுவரொட்டியில் தெரிவிப்பு

(பண்டாரவளை)

யாழ்ப்பாணத்தை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்ததைப்போல் பண்டாரவளையை அவர்களிடம் கொடுப்பதற்கு நாம் தயாராக வில்லையென்றவாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் பண்டாரவளை நகரில் காணப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற கோரமான படுகொலை சம்பவத்திற்கு முன்னதாக தேர்தலின் போது வெளியிடப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் துண்டுப்பிரசுரத்தின் பிற்பகுதியில் மேற்குறிப்பிட்ட வாசகங்கள் எழுதப்பட்டு ஒட்டப்பட்டிருந்தன.

அத்துண்டுப் பிரசுரத்தில் புனர் வாழ்வு முகாம் வேறு இடத்திற்கு மாற்றப் படாது விட்டால் புலிகளின்உடல்கள் கோரமாகவெட்டப்பட்டு எங்களது நாய்களுக்கு தீனியாகப் போடுவோம் என்றும் எழுதப்பட்டிருந்தது. (ம)

## 26 ஊழியர் காயம்

(கொழும்பு)

காலி மாவட்டத்திலுள்ள கொக்கரி தொழிற்பேட்டையில் உள்ள பிரத்தியேக நிறுவனத்தில் இடம்பெற்ற மின்சார ஒழுக்குக் காரணமாக 26 ஊழியர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தோரில் மூவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-5)

## புங்குடுதீவிலிருந்து இந்தியா சென்றோர் கைது

(தென்மராட்சி-

கடந்த 20-ம் திகதி புங்குடுதீவில் இருந்து படகு மூலம் இந்தியாவுக்குச் செல்ல முற்பட்ட 11 பேரை இலங்கை கடற்படை நடுக்கடலில்கைது செய்து ஊர்காவற்றுறை பொலிஸில் ஒப்படைத்தது.

இதில் 3 பெண்களும், 8 ஆண்களும் அடங்கியிருந்தனர்.

இப் 11 பேரும் தற்போது காங்கேசன்துறை தடுப்பு முகாமில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர்சட்டத்தரணி எஸ். ஜீவேஸ்வரா அண்மையில் அங்கு விஜயம் செய்து அவர்களைப் பார்வையிட்டார் என அறியப்படுகிறது. (க-77)

## இன்று செயல்முறை பரீட்சை

(கல்வயல்)

உஷன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் இது வரை க. பொ த. (சாதாரண) பரீட்சையில் விவசாயம், மனையியல் செயல்முறைக்கு தோற்றாத மாணவர்களுக்கு இன்று இப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் இன்று காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு சமூகமளிக்குமாறு மேற்படிக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (த-111)

## யாழ். பத்திரிகையாளரின் கொலையை கண்டித்து மட்டக்களப்பில்ஹர்த்தால்

[மட்டக்களப்பு]

யாழ்ப்பாணப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சுதந்திர மாணவர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமேற்படி ஹர்த்தாலை ஒட்டி நேற்று அங்கு பாடசாலைகள், அலுவலகங்கள், வர்த்தகநிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள் என்பவற்றின் பணிகள் ஸ்தம்பிதமடைந்த நிலையில் காணப்பட்டது.

இதே வேளை, காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய முஸ்லிம் பிரதேசங்களில் ஹர்த்தால் முறைப்படி அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-60)

## மாணவனின் முன்மாதிரிக்கு பலரும் பாராட்டு

(அரியாலை)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன் ஒருவர் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியொன்றினை கண்டெடுத்து அதிபரிடம் ஒப்படைத்தார்.

தெல்லிப்பளை அம்பனைச் சந்திக்கருகாமையில் இராசரட்ணம் குணசீலன் எனும் மேற்படி மாணவன் இப்பொருளைக் கண்டெடுத்தவராவார்.

இவருடைய இச்செயலானது கல்விச்சமுதாயத்திற்கு முன்மாதிரியாக அமைந்திருப்பதுடன், இவரால் தமது பாடசாலைக்கு பெருமை ஏற்பட்டுள்ளதாகவும் இக் கல்லூரி ஆதிபர், ஆசிரியர்கள் இம் மாணவனைப் பாராட்டியுள்ளனர்.

இத்தாலிக்கொடியை அப்பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் தகுந்த அடையாளம் காட்டி பெற்றுக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-106)

## காணி அன்பளிப்பு

(அரியாலை)

மாமனிதர் கலைஞானி அ. செல்வரத்தினம் தனது 3 1/2 பரப்புக்காணியை திறந்தவெளி அரங்கு ஒன்று அமைப்பதற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயத்திற்கு அருகாமையில் இவ்வரங்குஅமைக்கப்பட இருக்கிறது.

# வவுனியா விகாராதிபதி சியம்பலதேரர் கண்டனம்

பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற தமிழ்இளைஞர்களின் கோரமான படுகொலையை கண்டித்து வவுனியாநகர விகராதிபதி சியம்பல கஸ்பவ விமலவன்சதேரர் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது. 25 தமிழ் இளைஞர்கள் புனர்வாழ்வு நிலையத்தில் வைத்து கோரமாக கொல்லப்பட்டமை கண்டிக்கத் தக்கது மட்டுமல்லாமல் வரும் காலத்தில் இதுபோன்ற செயல்கள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுள்ளார். (வ)

## பாலியல் துஷ்பிரயோகம்

# திருமலை தாக்குதல் சம்பவம்

# இடம் பெயர்ந்தோருக்கு நிவாரண உதவிகள்

(திருகோணமலை)

திருகோணமலை துறைமுகத்தில் இடம் பெற்ற தாக்குதலையடுத்து இடம்பெயர்ந்த மக்கள் சீனன் குடாவை சுற்றியுள்ள பாடசாலைகள் மற்றும் பகுதிகளில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இடம் பெயர் பிரிவு பாய், சவர்க்காரம், பிளாஸ்ரிக் கூரைத்தகடுகள் என்பவற்றை வழங்கி வருவதுடன் தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் அரசாங்கமுலம் உலர் உணவுகளை இவர்களுக்கு விநியோகித்து வருகின்றது. (ந-5)

# பதில் பொலிஸ்மா அதிபர் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் பரவலாக இடம் பெறுகின்ற குற்றச் செயல்கள், கொள்ளை பாதாள உலகக் கும்பல்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றை துரிதகதியில் கட்டுப்படுத்துமாறு பதில் பொலிஸ்மா அதிபர் ரி. ஈ.ஆனந்தராஜா பொலிஸ் உயரதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அண்மைக்காலமாக சட்டத்துக்கு முரணான வழியில் கொள்ளை, கொலை போன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சட்டத்துக்கு முரணான வழியில் இந்நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்களை உடனடியாக கைதுசெய்யநடவடிக்கை எடுக்குமாறும் அவர் பொலிஸ் அதிகாரிகளை கேட்டுள்ளார்.

இது பற்றி விரிவான அறிக்கைய சமர்ப்பிக்குமாறு பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (2)

இதற்கான பத்திரம் இவர் கொண்ட தர்மகர்த்தா சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்வரங்கிற்கு மாமனிதர் கலைஞானி கலாலயம் எனப் பெயர் சூட்டப்படவுள்ளது. சமய பண்பாடு, கல்வி, கலை கலாசார நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு இவ் அரங்கு பயன்படும். (க-106)

# விவசாயிகள் சங்கம் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில்பயிர்ச் செய்கையினை மேற்கொள்ளும் பொருட்டு, கட்டாக் காலிகால்நடைகளைக்கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கைவிடுத்தனர்.

கடந்த வருடம் நாரந்தனை, காரைநகர் ,புளியங்கூடல் பகுதியில் பெரும்போகப்பயிர்ச் செய்கையின் போது இக்கட்டாக்காலிகள் பெரும் அழிவினை ஏற்படுத்தியிருந்தன.

இதன் காரணமாகவே விவசாயிகள் தரப்பில் இருந்து மேற்படி கோரிக்கைவிடப்பட்டுள்ளது. (த-75)

# சட்ட நடவடிக்கை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாலியல் துஷ் பிரயோகங்களுக்கு சிறுவர் உள்ளாக்கப்படுவது குறித்து கடும்சட்ட நடவடிக்கை எடுப்பதுகுறித்து நீதி அமைச்சர்களுடன் விரிவான பேச்சு நடத்தப்படுமென மகளிர் விவகார அமைச்சர் சுமிதாஜெயசேனா தெரிவித்தார்.

மேற்படி அமைச்சில் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார். (க-த)

# காத்தான்குடியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

காத்தான்குடி பிரதான வீதியில் நேற்று முன்தினம் பெருந்தொகையான ஆண்களும் பெண்களும், கலந்துகொண்ட மாபெரும் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. காலை 9-00 மணிக்கு ஆரம்பமான இப்போராட்டம் பல மணி நேரங்கள் தொடர்ந்தது.

மட்டக்களப்பு கள்ளியன் காட்டிலிருந்து இடம் பெயர்ந்து பூநொச்சிமுனைப் பகுதியில் அகதிகளாகக் குடியேறிய மீள் குடியேற்றக் கிராமத்தில் கிறிஸ்தவ தேவாலயம் அமைக்கப்பட்டு வருவதை கண்டித்தே அப்பகுதி முஸ்லிம்கள் இம்மறியல் போராட்டத்தை நடாத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

காத்தான்குடி, பிரதான வீதி இஸ்லாமிய கலாசார நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்ற இம்மறியல் போராட்டத்தினால் முகைதீன் மெத்தைப் பள்ளிவசல் வீதி போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் அமைச்சர் ஊப்ஹக்கீமுக்கு மகஜர்ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது. (க-60)

# இரட்டை வேடம் போட்ட பிக்கு பொலிசாரினால் கைதானார்

## தாய்லாந்தில் சம்பவம்

(பாங்கொக்)
இரட்டை வேடம் போட்ட தாய்லாந்து பௌத்த மத குரு பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

கோயிலில் குருவாகவும் காரில் வெளியே செல்லும் பொழுது இராணுவ அதிகாரியாகவும் இம்மதகுரு செல்வாராம்.

இராணுவ அதிகாரியாக வெளியில் செல்லும் பொழுது பல மோசடிகளில் ஈடுபட்டதாகவும் குறிப்பாகப் லஞ்சமாக பொருட்கள் வாங்குதல் ஊழல்கள் செய்தல் போன்ற வைகளில் இவர் ஈடுபட்டு வருவது தெரியவந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தம்மத்தூர் பஞ்சா என்ற ழைக்கப்படும் இந்த பௌத்த குரு சுப்பர் பாரி என்ற நகரில் அமைந்துள்ள சிறு புத்த கோயிலுக்குப் பொறுப்பான வரென்றும் இவருக்கு 43 வயதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

பல நாட்கள் இவரின் செயல்களைக் கவனித்து வந்த பொலிஸார் குறிப்பிட்ட வீட்டில் இரு இளம் பெண்களின் நடமாட்டம் காணப்பட்டதாகவும் அங்கு பிரஸ்தாப மதகுரு போய் வருவது வழக்கம் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவரின் காரை சோதனை செய்தபோது இராணுவ உடைகள், மஞ்சள் காவி மற்றும் பெண்களின் ஆடை அணிகள் காணப்பட்டதாகவும், மதுப்புட்டிகள் சிலவும் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தம்மத்தூர் பாஞ்சா என்ற இந்த பௌத்த பிக்குவின்நடவடிக்கைகளை விடியோப்படமாகபொலிசார் எடுத்திருப்பது பொலிசாருக்கு தகுந்த சாட்சியங்களாக அமைந்திருக்கின்றன வென்று தெரிவிக்கப்படுகிறது. (க-து)

# 60 லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் சாராயம் பிடிபட்டது

(சேலம்)
கன்னியாகுமரியிலிருந்து சேலத்துக்கு 60 இலட்சம் ரூபா பெறுமதியான சாராயம் கடத்த முற்பட்டபோது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

7 ஆயிரம் லீற்றர் சாராயத்தை லொறியில் கடத்த முற்பட்ட போது லொறியில் சந்தேகம் ஏற்பட்டதால் காவல்துறையினர் சோதனையிட்டனர்.

லொறியில் மரப் பெட்டிகளுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அவ்வளவு சாராயத்தினையும் காவல்துறையினர் கைப்பற்றினர்.

குறிப்பிட்ட லொறி தடுத்துவைக்கப்பட்டுடன் லொறி ஓட்டுநரையும் உதவியாளர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதே வேளை இச்சாராயம் போலிமருந்துகள் செய்வதற்காகக் கடத்தப்பட்டன வென்று ஊர்ஜிதமற்ற செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [து]

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் மீது ஊழல் குற்றச்சாட்டு

## 22ஆயிரம் பக்கங்களில் அறிக்கையாம்

(இஸ்லாமபாத்)
பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ அளவுக்கு மிஞ்சி சொத்து சேர்த்தது தொடர்பாக 22 ஆயிரம் பக்கங்களில் அறிக்கை வெளிவந்துள்ளது.

பெனாசிர்பூட்டோ ஆட்சியிலிருந்த போது பாகிஸ்தானிலும் பிரான்ஸ், பிரிட்டன் போன்ற நாடுகளில் வீடுகள் மற்றும் ஹோட்டல்கள் வாங்கிவிட்டதாகவும் அதிகாரத்தைப்பயன்படுத்தி இந்தச் சொத்துக்களை இவர் சேர்த்தார் என்றும் அந்தஅறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் இன்றைய இராணுவ அரசு இவருக்கு 1999ஆம் ஆண்டு தண்டனை வழங்கி 7ஆண்டுகளுக்கு அரசியலில்ஈடுபடமுடியாதென்று தடைவிதிக் கப்பட்டிருப்பதும் அறிந்ததே. (து)

உலக தரிசனம்

# குறைபிடி விளைவித்த அனர்த்தம்

# பர்மிய ராணுவம் சுட்டதில் 5 இந்திய வீரர்கள் பலி

(புதுடில்லி)
இந்திய பர்மிய எல்லையில் இந்திய வீரர்கள் 5 பேரை பர்மிய இராணுவம் சுட்டுக் கொன்றுள்ளது.

இந்தியாவின் நகலாந்து மாநிலத்தில் நடந்த இந்தச் சம்பவத்தை யொட்டி நாகலாந்து தலைமைப் பொலிஸ் அதிகாரி கூறுகையில் இது தவறுதலாக நடந்ததென்றும் தெரிவித்தார்.

பர்மாவில் தடைசெய்யப்பட்ட கும்பலொன்றைத் துரத்தி வந்த பர்மிய இராணுவத்தினர் சீருடையில் நாகலாந்து எல்லைப்புற ரோந்திலிருந்து இந்திய இராணுவத்தினரைச் சுட்டுவிட்டதாகவும் மேலும் அந்த அதிகாரி தெரிவித்தார். (து)

# 14வருடம் வயிற்றிலிருந்து நலிந்தநிலையில் சிசு மீட்பு

(கல்கத்தா)
கல்கத்தா மருத்துவ மனையில் 55 வயதுப்பெண்வயிற்றிலிருந்து நலிந்த நிலையிலான சிசு ஒன்று எடுக்கப்பட்டது.

இந்தப்பெண் 14ம் ஆண்டுகளுக்கு முன் கருத்தரித்திருந்ததாகவும் 7 மாதம் கருவரை வளர்ச்சியடைந்துபின்பு ஏதோ காரணத்தால் குழந்தை மடிந்து, அடிவயிற்றில்வற்றலாகி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கல்கத்தா மருத்துவ மனையில் சத்திரசிகிச்சையின் பின்னரே இந்த வற்றலான சிசு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

# யூலியஸ் சீசர் நாடகத்தை திரைப்படமாக்க முயற்சி

(நியூயோர்க்)
யூலியஸ் சீசர் நாடகத்தை நவீன திரைப்படமாக வெளியிடும் முயற்சி அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒஸ்கார் விருது பெற்ற இயக்குநரான ஒலிங்பின் ரோன் இம் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலத்திற்கு ஏற்றவாறு அமெரிக்காவின் அரசியல் அடிப்படையை வைத்து 'அமெரிக்கா சீசன்'' எனும் பெயரில் இத்திரைப்படம் வெளியிடப்படவுள்ளது.

இதற்கான திரைக்கதை வசனத்தை வில்லியம் நிக் கோட்டன் எழுதியுள்ளார். (த)

# ஐ. நா. பாதுகாப்பு சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்

## ஜப்பான் பிரதிநிதி தெரிவிப்பு

(நியுயோர்க்)
ஐக்கிய நாடுகள்பாதுகாப்பு சபையின் உறுப்பினர்களை அதிகரிக்க வேண்டும் என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.

இப்போது ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபையில்15 நாடுகள் அங்கம் வகிக்கின்றன வென்றும் இது 24 ஆக அதிகரிக்க வேண்டுமென்றும் ஐக்கிய நாடுகளுக்கான ஜப்பானின் தூதுவர் யூசியோ சாத்தோ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்; அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ் ஆகிய 5 நாடுகள் நிரந்தரமாகஇருக்கின்றன. இரு ஆண்டுக் கொருதரம் 10 உறுப்பு நாடுகள் தெரிவுசெய்யப்படு நாடுகள் 14 ஆகவும் அமைய வேண்டும் எனவும் ஜப்பான் தூதுவர் யூசியோ சாத்தோ தெரிவித்தார்.

அதேவேளை ஜப்பான் போன்ற நாடுகளுக்கு பாதுகாப்பு சபையில் நிரந்தர அங்கத்துவம் கொடுக்கவேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார். (து)

## புதிய முதலவர் தெரிவானார்

(லக்னோ)
உத்தரப் பிரதேச முதல்வராக ராஜ்நாத்சிங் இன்று சனிக்கிழமை பதவி ஏற்கவுள்ளதாகலக்னோ செய்திகள்

# 2பேர் பலி; 26 பேர் படுகாயம்

(புதுடில்லி)
சஞ்சாப்பில் பக்சிங் றிவாடி பயணிகள் ரயில் வண்டியில் ஏற்பட்ட வெடி விபத்தில் 2 பேர் இழந்தனர் 26 பேர் காயம் அடைந்தனர்.

பசந்தா விற்கும் பீச்சா விற்கும் மிடையே வடிகபி கால் ரயில் நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. காயமடைந்தோர் உடனடியாகமருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தில் ஒருபெட்டி சேதமாகி விட்டது என்றும் சில மணி நேரத்தில் பெட்டி அப்புறப்படுத்தி விட்டுவழமை போல் பயணங்கள்தொடங்கி விட்டன என்று தெரிவிக்ப் படுகிறது.

தீபாவளி வெடி சாக்கின் மீது எரிந்த நிலையில் குறை பீடி விழுந்ததாலேயே இந்த வெடி விபத்து ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. (து)

# மாவோ தீவிரவாதிகள்-அரசு விரைவில் பேச்சுவார்த்தை

## நேபாளத்தில் ஆரம்பம்

(காட்மண்டு)
நேபாளத்தில்மாவோதீவிர வாதிகளுக்கும் அரசுக்கு மிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற இருப்பதாக அதிகார பூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

4 ஆண்டுகளுக்கு முன் மாவோ கிளர்ச்சியாளர்கள் நேபாளத்தை ஒருகம்யூனிஸ்ட் குடியரசாக அமைப்பதற்கு கிளர்ச்சி செய்தனர்.

அன்று தொடக்கம் இன்று வரை நேபாள அரசுக்கும் மாவோகிளர்ச்சியாளர்களுக்குமிடையில் அடிக்கடி சண்டைகள் நடைபெற்று வருகின்றன.

இதைஇணக்கப்பாட்டுக்குக் கொண்டுவரும் பேச்சு வார்த்தையில் நேபாள துணைப் பிரதமர் ராவ்சந்திராவும் பெயர் குறிப்பிட விரும்பாத மாவோ கிளர்ச்சியாளத் தலைவர்களில் ஒருவரும் இரகசியப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

முன்னாள் கம்யூனிஸ்ட் அமைச்சர் பத்மரத்னா இந்த பேச்சுவார்த்தைக்குரிய ஏற்பாடுகளில் இறங்கியிருக்கிறாரென்றும் அடுத்த சிலதினங்களில் நடக்க இருக்கும் இப்பேச்சு வார்த்தை ஒருபூர்வாங்கப் பேச்சாக அமையுமென்று தெரிவிக்கப்படுகிறது. (து)

நாடுகள் தெரிவுசெய்யப்படுகின்றன. இந்த உறுப்பு நாடுகள் கூட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஐ.நா பாதுகாப்புச் சபை விஸ்தரிக்கப்படும் போதுநிரந்தர அங்கத்துவ நாடுகள் 10 ஆகவும் தற்காலிக அங்கத்துவ ளதாகலக்னோ செய்திகள் தெரிவித்துள்ளன.

லக்னோவில் புதன் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் இவர் தெரிவு செய்யப் பட்டார்.

(கு-து)

நீரில் மூழ்கிய த காஸ்ற் கப்பல்

# மாலுமியிடம் இருந்து கடிதம் மீட்பு

[மொஸ்கோ]
கடலில் மூழ்கிய 'த காஸ்ற்' ரஷ்ய அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பலில் மரணமடைந்த மாலுமி ஒருவரின் சட்டைப் பையில் இருந்து கடிதம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1.15 என நேரம் குறிப்பிடப்பட்டு எழுதப்பட்டுள்ள அக் கடிதத்தில், 6 ஆம் 7 ஆம் 8 ஆம் தளங்களில் இருந்து 9 ஆம் தளத்திற்கு செல்கின்றோம்.

இதில் 23 பேர் அடங்குகின்றோம்.எம்மால் உயிர்தப்ப முடியாதென ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்னரே இத்தளத்திற்கு விரைகின்றோம் என எழுதப்பட்டுள்ளதுடன்,அவசரஅவசரமாக இக்கடிதத்தினை எழுதுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக் கடிதம் லெப்டினன்ட் நிக்கொலஸ் நிக்கோ என்ற இறந்த மாலுமியுடைய சட்டைப்பையில் இருந்து மீட்கப் பட்டதாய் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம், கடந்த ஒகஸ்ற் மாதம் 118 மாலுமிகளுடன் ரஷ்ய அணுவாயுத நீர்மூழ்கி கடலில் மூழ்கியதும், அவர்களை மீட்பதற்காய், ரஷ்ய அரசு பல நாடுகளின் உதவியுடன் மேற்கொண்ட பகீரதப் பிரயத்தனம் பலிதமாகாமல் போனமையும், அண்மையில் அவர்களது சடலங்களை மீட்க சுழியோடி ஒருவர் கப்பலுட் புகுந்ததும் தெரிந்ததே.

(உ)

கானமுயல் எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது
குறள்

## வலம்புரி

### சுட்ட மண்ணும் பச்சை மண்ணும்

பண்டாரவளை பிந்துனுவேவ லோயா முகாமில் தமிழ் இளைஞர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவமானது சமகாலத்தில் தமிழர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு எத்தகையதென்பதை தெளிவாக உணர்த்தும். அது மட்டுமன்றி தமிழர்களின் விடயங்களில் சிங்களப் புத்திஜீவிகள்கூட எத்தகைய மனோநிலையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு பண்டாரவளை, பதுளை வைத்தியசாலைகளில் நடந்த சம்பவங்கள் நல்லதோர் உதாரணம்.

மருத்துவத் தொழில் என்பது இன-மத-மொழி வேறுபாடு கடந்த தெய்வீகப்பணி, ஆனால் பண்டாரவளையில் வெட்டுக் காயங்களுக்கு ஆளாகி இரத்தம் தோய்ந்தநிலையில் அவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டபோதிலும் அங்கு கடமையிலிருந்த சிங்கள இன வைத்தியர்களும் தாதிகளும் மாற்றுக்கண் கொண்டு சிகிச்சையளிப்பதில் தாமதம் காட்டியுள்ளனர்

தமிழரென்ற ஒரே காரணத்திற்காக வைத்தியசாலைகள் நடந்துகொண்டவிதம் உலக சுகாதார ஸ்தாபனத்தின் மருத்துவ சாசனங்களுக்கு விரோதமானது. இத்தகைய சம்பவங்கள் இன்றுநேற்றல்ல காலாகாலமாக தென்னிலங்கை வைத்தியசாலைகளில் தமிழர்களுக்குச் செய்யப்படும் கொடுமை

இலங்கையின் முறைசார்கல்வியில்

# இடைநிலைமட்ட மாணவர்கள் மத்தியில் காணப்படும் கணிதபாட தாழ் அடைவு

6

(நேற்றைய தொடர்ச்சி)

1 கணித அடிப்படை அறிவு
2 மொழி ஆற்றல்
3 கணித எண்ணக்கருக்களை சுமாராக விளங்கிக் கொளலல்.
4 கூட்டல், கழித்தல் பெருக்கல், பிரித்தல் போன்ற கணித அடிப்படைச் செயல்களில் திறன்
5 கணிதபாட வேலைகளை விளங்கிப் பிரதிபண்ணல்
6 கொடுக்கும் கணிதபாட வேலைகளை (ஒப்படைகள்) மேற்கொள்ளல்
7 தற்போது கற்கும் வகுப்புக்கு முன்னைய வகுப்புகளுக்குரிய கணிதபாட அளவு மட்டத்தை பெற்றிருத்தல்
8 நினைவாற்றலைக்கொண்டிருத்தல்

இடைநிலை மட்ட வகுப்புக்களில் கற்கும் மாணவரில் கணித பாடத்தில் தாழ் அடைவைப் பெறுவோர் பொதுவாக மேலே கூறப்பட்ட திறன்கள் சார்பான குறைபாடுகளைக் கொண்டு காணப்படுகின்றனர் என்று அறியப்படுகிறது. இதனால் கணிதத்தில் தாழ்தேர்ச்சி பெறுவோரின் கணிதக் கற்றல் பாதிப்படைவதுடன், அவர்களின் கணிதபாட அடைவும் மிகவும் மோசமானதாக அமைகிறது.

இக்குறைபாட்டுக்குரிய காரண கர்த்தாக்கள் யார்? உண்மையில் இதனுடன் தொடர்புபட்ட ஆளணியினரில் முக்கிய பாத்திரம் வகிப்பவர் ஆசிரியரே. இன்று மாணவன் ஓர் இயந்திரம் - உணர்வுறுப்புகளால் தயாராக நிற்கும் ஓர் இயந்திரம் அந்த இயந்திரத்தை இயக்கும் பொறுப்பே ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. முறைசார் பாடசாலையில் அறிவையும் திறன்களையும் வழங்குபவர் ஆசிரியரே. எனவே ஆசிரியர் பயன்படக்கூடியவராக பயிற்றுவிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் கூடிய பயிற்சியும், அர்ப்பணிப்பும் தேவைப்படுகிறது. குறை வசதியுள்ள பாடசாலைகள் அனேகமா மிகக் குறைந்த தகமையுடன் ஆசிரியர்களையும் மிக அதிருப்தியான ஆசிரியர் - மாணவர் விகிதத்தையும் கொண்டுள்ளன. இங்கு கற்றலுக்கான சூழல் காணப்படாமையினாலும் முறைசார் கற்றலுக்குரிய எவ்வித மாற்று வழிகளும் இல்லாததனாலும் திருப்தியற்ற ஆசிரியர் - மாணவர் விகிதம், வசதிபடைத்த பாடசாலைகளைவிட இப்பாடசாலைகளைக் கூடுதலாக தாக்குகின்றன. வசதியற்ற பகுதிகளிலுள்ளஆசிரியர்களும் நகர்புற, நகர்சார் பகுதிகளுக்குச் செல்ல எத்தனிக்கின்றனர். ஆசிரிய பயிற்சி நெறியிலும் வசதி குறைந்த பாடசாலைகளில் கையாளற் கூடிய பொருத்தமான கற்பித்தல் திறன்களின் அபிவிருத்திக்கும் விசேட கவனம் செலுத்தப்படவுமில்லை.

> கணிதபாடத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பலவருட கால அனுபவமுடைய பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் த காங்கேசபிள்ளை அவர்கள் இடைநிலை மட்ட மாணவர்கள் மத்தியில் மேற்கொண்ட கணிதபாட தாழ் அடைவு பற்றிய ஆய்வுக் கட்டுரை ஆசிரியர்கள் மாணவர்களின் நலன் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.(ஆ-ர்)

எனவே கற்பித்தலின் தரம், மாணவர் ஊக்குவிப்பு, பாடசாலையில் உறுதிப்பாடு என்பன பாதிப்படைவது திண்ணமே. மேலும் ஆசிரிய கலாசாலைகள் தமது ஆசிரிய பயிற்சி நெறிகளுக்கு வசதிபடைத்த பாடசாலைகளையே பயன்படுத்துவதோடு வசதி குறைந்த பாடசாலைகளில் கற்பித்தல்மேல் கவனம் செலுத்துவதில்லை. எனவே கல்வியிலுள்ள 'பிரமுகத்துவம்' ஆசிரிய பயிற்சியிலிருந்து நீக்கப்படாவிடின் தாழ் அடைவு நிலைத்திருக்கும்.

கணித பாடத்தில் தாழ் அடைவு பெரும்பாலும் குறை வசதியுள்ள பாடசாலைகளுடன் பின்னிப்பிணைந்திருக்கிறது, எனவே, இப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இப்பாடசாலைகளின் இயல்பையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு மாணவரின் தேவைகளுக்கும் கவர்ச்சிக்கும் பொருத்தமான கற்பித்தல் முறையியலை விருத்தி செய்வதற்காக தம்மை அர்ப்பணிக்க வேண்டும். இதன்படி ஆசிரியருக்குரிய பல்தரக் கற்பித்தல், பாகரக் கற்பித்தல் முறைகளில் மிகச்சாத்தியமான நுட்பங்களை ஆசிரிய பயிற்சி நெறிகளில் உள்ளடக்குதல் இன்றைய உண்மையான தேவையாகும். இதனால் சிறந்த ஆசிரியர்கள் உருவாக்கப்படுவதுடன் மாணவர்களின் கணிதபாட அடிப்படைத் திறன்களின் அடைவை உயர்த்துவதுடன் கணிதபாட அடைவையும் உயர்த்த முடியும்.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது தாழ் அடைவுடன் தொடர்புடைய குறைவசதியுள்ள பாடசாலைகளில் நிலவிவரும் மிக உக்கிரமான மாறிகளை இன்னும் இனம் கண்டு தீர்க்கவேண்டியது முக்கியமானதொன்றாகும். ஏனெனில் சமூகபொருளாதார குறிகாட்டிகள் மாத்திரமின்றி ஆர்வங்கள், உணர்வு பழக்கவழக்கங்கள் அறியாமை போன்ற ஏனைய மாறிகளும் தாழ் அடைவில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். மேலும், குறைவசதியுள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சி நெறியை திட்டமிடவும், தரப்படுத்தலும் காலத்திற்குரிய தேவையாக உள்ளது. எனவே வழமையான கற்றல் முறைகளில் உள்ள பிக்குறைபாடுகளை வெற்றி கொள்வதற்காகவும் யுத்த சூழலில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக நெருக்கடி நிலைக்கல்வி முறையையும் மேற்கொள்வதற்காகவும் பல்கலைக்கழகங்கள் தேசிய கல்வி நிறுவகம், அரசியல் வாதிகள் கல்விமான்கள், செல்வந்தர்கள் தமது பங்களிப்பை நல்கவேண்டும்.

முற்றும்

**தம்பியப்பா காங்கேசபிள்ளை**
B. Sc Dip - In - Edu, M. Phil (Edu.)
விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை

# உலகில் சமாதானம் நிலை பெற ஆத்மீக சிந்தனை அவசியம்

## யாழ். பல்கலை விரிவுரையாளர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

உலகில் பல காத்திரமிக்க கான காரணங்களை நாம்

### வலைப்பந்தட்ட போட்டிகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை தேசிய வலைபந்தாட்ட சம்மேளனத்தின் வலைப் பந்தாட்ட சம்பியன் போட்டிகள் பேராதனை பல்கலைக் கழக மைதானத்

செய்யப்படும் கொடுமை களின் தொடர்ச்சியென் றேகூறவேண்டும்.

தமிழர்கள் இனியும் சிங் களப் பேரினவாதத்துடன் ஒன்றுசேர்ந்து ஒற்றுமை யாக வாழமுடியாதென் பது உண்மையாகி-உறுதி யாகிவிட்டது. சிங்களமக் களில் ஒருசாரரார் நீதி உணர்ந்தவர்களாக, தமி ழர்களுக்கு உரிமை வழங் குவதை ஏற்றுக்கொண்ட வர்களாக இருப்பினும் சமாதானமென்பது எல் லோராலும் கடைப்பிடிக் கப்பட வேண்டியதொன் றாகும். ஒருசிலர் காடைத் தனமாக நடந்தாலும் - நடக்க அனுமதிக்கப்பட் டாலும் அதனால் சமா தானமென்ற எண்ணக் கரு முழுமைபெறாது

இதனால் சிங்களவர் களும் தமிழர் ளும் இனி மேல் சுட்டமண்ணும் பச் சைமண்ணும் என்றநிலை யிலேயே வாழப்போகின் றனர்.

---

உலகில் சமாதானம் நிலை பெறவேண்டுமாயின் ஆத்மீக ஈடுபாட்டினை உள்ளடக்கிய தான முயற்சிகள் மேற்கொள் ளப்படல் வேண்டும். ஆத்மீக ஆதரவு அல்லது ஈடுபாடு இல்லாத எந்தத் தீர்வுமே சமாதானத்தைக் கொண்டு வர முடியாது.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் நுண் கலைப் பீடத்தின் தலைவரும் இந்து நாகரிகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரு மாகிய திருமதி. நாச்சியார் செல்வநாயகம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் சங் கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயத்தில் நடத்திய ஐக்கிய நாடுகள் சபையின் 55 வது ஆண்டுக் கூட்டத்தில் உரையாற்றிய சமயம் குறிப் பிட்டார்.

கழகத் தலைவர் லயன். கே. சற்குணதேவன் தலை மையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வித்தியாலயத் தின் உயர்தர வகுப்பு மாண வர்கள் மற்றும் ஆசிரியர்களும் பங்குகொண்டிருந்தனர்.

சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. நாச்சியார் செல்வ நாயகம் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

கடந்த 55 வருடங்களில் ஐக்கிய நாடுகள் சபையானது உலகில் பல காத்திரமிக்க செயல்திட்டங்களை நிறை வேற்றியிருந்த போதிலும் கூட, சிலநாடுகளில் சமா தானத்தினை ஏற்படுத்து வதற்கு எடுக்கப்பட்ட முயற் சிகள் திருப்திகரமான முடிவு களைத் தரவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும். இதற் கான காரணங்களை நாம் ஆராய்கின்றபோது. அவற் றில் ஆத்மீக உணர்வும் ஈடு பாடும் இல்லாமையுமே முக் கியமான காரணங்களாகத் தெரிகின்றது என்றார்.

கழகச் செயலாளர் லயன். கே. சிவபாலசுப்பிரமணியம் நன்றியுரை கூறினார். (க-77

## சகலரும் ஒன்றிணைவது தீர்வுக்குவழி வகுக்கும்

(கொழும்பு)

மக்களால் தெரிவு செய்யப் படும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து நாட்டின் நலன் கருதி செயற் படுவதன் மூலமே இனப்பிரச் சினைக்கு தீர்வு கண்டு நாட் டில் அமைதி, சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறு கொழும்பு அதி மேற்றாணியார் வணக்திற் குரிய கலாநிதி நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ நாட்டின் அரசியல் தலை வர்களுக்கு விடுத்த பகிரங்கக் கடிதத்தில் தெரிவித்துள் ளார்.

அவர் அக்கடிதத்தில் மேலும் தெரிவித்ததாவது.

இனப்பிரச்சினைக்குத்தீர்வு கண்டு, நாட்டில் அமைதியை யும் சமாதானத்தையும் உரு வாக்க வேண்டுமானால், பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகி யன ஒன்றிணைந்து கூட்டணி அமைப்பது மாத்திரம் போது மானதல்ல, சகல அரசியல் கட்சிகளும் இனமத பேதம் மறந்து சுயநல மற்ற பொது நோக்கில் பாடுபட வேண் டும் என்றார்.

தேசிய ஒற்றுமைக்கும், நாட்டின் முன்னேற்றத்திற் கும் சிறந்த நடவடிக்கை களை மேற்கொள்ளநல்ல தரு ணம் ஏற்பட்டுள்ள இவ்வே ளையில் அனைத்து அரசியல் தலைவர்களும் இதனை பயன் படுத்தி கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெ வித்துள்ளார். (க 2)

---

பல்கலைக் கழக மைதானத் தில் இன்று நடைபெறவுள் ளது.

இன்றும் திகதியும் நடை பெறவுள்ளஇப் போட்டிகளில் இலங்கையின் பல பாகங்களி லிருந்தும்பெண்கள் அணியில் 25பேரும் ஆண்கள் அணியில 20 பேரும்கலந்துகொள்ள வுள்ளனர்.

மேற்படி போட்டியின் இறுதிபாட்டத்தில் வெற்றி பெறும் ஆண்களின் வலைப் பந்தாட்ட அணி 2004ஆம் ஆண்டு கிரேக்க தலைநகர் எதன்ஸ்இல் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்ற தெரிவு செய்யப்படும் எனத்தெரிவிக்கப்படுகிறது. (த)

## தொடரும் மீளாய்வுப் பணி

(மல்லாகம்)

சுன்னாகம் தெற்கு J/196 பகுதியிலுள்ள மக்களுடைய உலர் உணவு அட்டைகள் மீளாய்வு செய்யப்படு கின்றன.

இவற்றை இப்பகுதி கிராம சேவையாளரிடம் சமர்ப்பித்து மீளாய்வு செய்யுமாறு அறி விக்கப்பட்டுள்ளது. (த-14)

# பத்திரிகையாளர் நிமலராஜனின் கொலை பொதுமக்கள் தகவல் தரவும் பொலிஸார் வேண்டு கோள்

(யாழ்ப்பாணம்)
கடந்த வியாழக்கிழமை இரவு 10-00 மணியளவில் அவரது வீட்டில் வைத்து ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை தொடர்பாக தகவல் தெரிந்தோர் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொலைபேசி இலக்கம் 021-2221 அல்லது 021-2222 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தை நேரில் கண்டோர் மற்றும் இதுதொடர்பான தகவல் தெரிந்தோர் தயக்கம் ஏதுமின்றி மேற்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

# கடவுச் சீட்டு பெறச் சென்றவர் சோதனைச் சாவடியில் கைது

(ஏறாவூர்)
கொழும்பில் பாஸ்ப்போட் எடுப்பதற்காக வந்தாறுமூலையில் இருந்து சந்துவெளி கிராமசேவையாளர் ஞானமுத்து விவேகானந்தனுடன் மூன்று இளைஞர்கள் கொழும்பு சென்ற போது பன்னம்பிட்டி பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரையும் கொழும்பிலுள்ள பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு பொலிசாரிடம் விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களும் விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# தமிழ் இளைஞர்கள் கொலைசெய்யப்பட்ட இடத்தை அமைச்சர் டக்ளஸ் உட்பட 4பேர் கொண்ட குழு பார்வையிட்டது

(கொழும்பு)
பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் படுகொலை செய்யப்பட்டும் காயமடைந்துமுள்ள தமிழ் இளைஞர்களை தியத்தலாவை இராணுவ வைத்தியசாலையில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் மூன்று அமைச்சர்கள் பார்வையிட்டுள்ளனர்.

தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு கால் நடை அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு, வடக்குக் கிழக்கு தமிழ் அபிவிருத்தி இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, விமானப் போக்குவரத்து விமான நிலைய அபிவிருத்தி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ பிள்ளை ஆகிய அமைச்சர்களே சம்பவ இடத்தை நேரில் சென்று பார்த்தவர்களாகும்.

இவர்கள் இப் படுகொலை தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளார்கள்.

இதே வேளை எதிர்க்கட்சி சார்பில் மலையக மக்கள்முன்னணித் தலைவரும் எம்.பியுமான பெ.சந்திரசேகரனும் சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டுள்ளார். (வ)

# நிமலராஜனின் படுகொலை வவுனியா மட்டக்களப்பு ஹர்த்தால் பூரண வெற்றி

(வவுனியா)
யாழ்ப்பாண செய்தியாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையைக் கண்டித்து நேற்று வவுனியாவில் நடத்தப்பட்ட ஹர்த்தால் பூரண வெற்றி அளித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த ஹர்த்தாலின் போது வவுனியாவில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன, சந்தைகள் கூடவில்லை பாடசாலைக்கு மாணவாகள் செல்லவில்லை ஆசிரியர்கள் மட்டுமே பாடசாலையில் காணப்பட்டனர்.

அரச அலுவலங்கள் இயங்கிய போதும் அரச அலுவலர்கள் வரவு மிகவும் குறைவாகக்காணப்பட்டது.

நிமலராஜன் படுகொலையை கண்டித்துசுதந்திர மாணவர் முன்னணி அலைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

(மட்டக்களப்பு)
பத்திரிகையாளன் நிமலராஜன் படுகொலையை கண்டித்து நேற்று நடத்தப்பட்ட ஹர்த்தால் வெற்றியளித்ததாக மட்டக்களப்பு செய்தியாளர் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நகரில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டு கறுப்பு கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. அரச அலுவலகங்களில் அரச அலுவலர்களின் வரவுமிகக் குறைவாக இருந்தமையால் அரச அலுவலகங்கள் இயங்கவில்லை. பாடசாலைகளில் ஆசிரியர்கள் சமுகமளித்திருந்த போதும் மாணவர்களின் வரவு குறைவாக காணப்பட்டதால் பாடசாலைகள் இயங்க்வில்லை. (ம)

# அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
மறைந்த ஓவியர் 'மாற்குவின்' நினைவாக யாழ் திருமறைக் கலா மன்றத்தினால் இன்று பிற்பகல் 3 மணிக்கு மன்ற கலைத்தூது மண்டபத்தில் அஞ்சலிநிகழ்வொன்று நடத்தப்படவுள்ளது.

இந் நிகழ்வில் ஓவியர்களான கைலாசநாதன், இராசையா, ரமணி ஆகியோரும் அ. யேசுராஜா, டொமினிக் ஜீவா, ஏ. வி. ஆனந்தன் போன்றோரும் கலந்து கொண்டு அஞ்சலியுரையாற்றவுள்ளனர். (க)

# போலியோ சொட்டு மருந்து

(ஊர்காவற்றுறை)
இன்று ஆரம்பமாகும் போலியோ சொட்டு மருந்து வழங்கும் செயற்பாடு தீவு பகுதியில் 16 நிலையங்களில் இடம்பெறவுள்ளது. (உ-75)

# இரு சடலம் ஒப்படைப்பு

(திருமலை)
பண்டாரவளை புனர்வாழ்வு நிலைய முகாமில் கோரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்ட திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த இரு இளைஞர்களின் சடலம் நேற்று அங்கிருந்து எடுத்து வரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### யாழ்ப்பாண.

கூட்டுறவு அமைப்புகள் தமது ஸ்தாபனங்களை மூடி பூரண ஒத்துழைப்பை வழங்கி பூரண எதிர்பைக்காட்ட உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத்துக்கதின அனுஷ்டிப்பு போலியோ சொட்டு மருந்த வழங்குவதை எவ்வகையிலும் பாதிக்காதென ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்டப் பிரதி அமைப்பாளர் க. மணிபலவராஜன் தெரிவித்துள்ளார். (ம)

### சுதந்திர ..

அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் இராணுவத்தினரால் அல்லது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டவர்கள் அல்ல. அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று தமது சுயவிருப்பின் பேரில் சரணடைந்தவர்கள்.

இவ்விளைஞர்களின் படுகொலை தொடர்பாக சுதந்திர ஆணைக்குழு ஒன்றை நிறுவி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைக் கேட்டுள்ளார். (ந-4-5)

### கருகிய நிலையில் ..

கள் தொடர்ந்து அபாயகரமான கட்டத்தில் இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது இவர்கள் இனவாதக் கிராமவாசிகள் புனர்வாழ்வு நிலையத்தின் பிரதான வாயிலூடாக சென்றே தமது கோர வெறித்தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர் எனத்தெரியவந்துள்ளது.

இது தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் இதுவரை கைது செய்யப்பட்டவர்களில் 110 பேர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்றும் தொடர்ந்தும் அவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (வ)

### முகாம்---

னவே திட்டமிடப்பட்டிருந்ததாகக் கூறப்படுவது குறித்தும், பண்டாரவளை நகரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் குறித்தும் விசாரணைகள் நடைபெறுகின்றது.

இதேவேளை இக்கொலை தொடர்பாக விசாரணைக்காக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் புனர்வாழ்வு நிலைய பொறுப்பதிகாரி கப்டன் அபேரத்தினாவும் ஒருவர்.

இத்தாக்குதலுக்கு பயன்படுத்திய ஆயுதங்கள் சிலவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகிறது. (வ-2)

### வன்னியில்:..

பகுதியில் உள்ள பொதுஜன

### கொடிய---

மைப்பின் இணை அமைப்பாளர்கள் ஸ்ரீதுங்க ஜெயசூரிய க.தேவதாசன் ஆகியோர் விடுத்து அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

முன்னெப்போதுமில்லாதவாறு பேரினவாதம் துபுவடிவம் பெற்றுவிட்டது. அரசியல் மயப்படுத்தப்பட்ட இப் பேரின வாதத்தை தேற்கடிக்கும் முகமாக இன்று பிற்பகல் 3.30 மணியளவில்

### யாழ்.

யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

### அனுராவின்

யளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 'சுஜித் ஜெயசிங்க' என்பவரே இவ்வாறு சுட்டுக்

ஈ.பி.டி.பி யின்
வேண்டுகோள்

## வேண்டுகோள்

# இன்று சனிக்கிழமை யாழ் குடா முழுவதும் துக்கம் அனுஷ்டிப்பு!

பண்டாரவளை [illegible] முகாமில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்று (28-10-2000) சனிக்கிழமை யாழ். குடாநாடு முழுவதும் பூரண துக்கம் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இதற்கு வர்த்தக நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், பொது, அரச அமைப்புக்கள் தமது ஸ்தாபனங்களை மூடியும், தனியார் போக்குவரத்து சேவையாளர்கள் போக்குவரத்து சேவையினை இடை நிறுத்தியும் ஆதரவு வழங்குமாறும் வேண்டுகிறோம்.**

**ஈழ மக்கள் ஜனநாயக கட்சி**
**(யாழ்மாவட்டம்)**

(கி-979)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அமைப்புக்களே இக்கண்டன பேரணியை ஏற்பாடு செய்துள்ளது.

நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ் இளைஞர்கள் மீதான தாக்குதலைக் கண்டிக்கும் வகையில் சுலோகங்கள் பதாதைகளை தாங்கிய வண்ணமும், படுகொலைகளை கண்டித்து கோசமெழுப்பியும், ஊர்வலமாகச் சென்று ஜனாதிபதிக்கும் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் கோபி அனானுக்கும் மகஜர் முல்லைத்தீவு அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (ம)

---

வவு.

ரூபேஸ்குமார், சாந்தசோலையைச் சேர்ந்த இராமசாமி கருணாகரன் ஆகியோரின் சடலங்கள் உறவினர்களிடம், மன்னார் மாவட்ட முருங்கனைச் சேர்ந்த குணபாலம் ஜெயவர்த்தனம் என்பவரின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், இன்று அச்சடலம் முருங்கனுக்கு எடுத்துச் செல்லப்படும் என்றும் வவுனியா பதில் அரச அதிபர் ரகுநாதப்பிள்ளை தெரிவித்துள்ளார். (ம)

பகல் 3.30 மணியளவில் இலக்கம் 281, டீன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு- 10ல் உள்ள சமய சமூக நிலையத்தில் நடத்தப் படும் பொதுக் கலந்துரையாடலில் சகல பொது அமைப்புக்களையும் அரசியல் கட்சிகளையும் மற்றும் தொழில் சங்கங்களையும் கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந-4)

என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இவர் பயணம் செய்த வாகனத்தின் மீது இனந் தெரியாதோர்மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போதேஇவ்வுயிரிழப்பு நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (4)


## 9-வது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி ச. சரணிகா

சர்வலோகராசா செந்தமிழ்ச்செல்வி தம்பதிகளின் செல்வப் புதல்வி **சரணிகா** 9ஆவது பிறந்த நாளை தனது இல்லத்தில் 28-10-2000 இன்று குதூகலமாக கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசைத்தம்பிகளான சஜீவன், சஞ்சீவன் ஆகியோர் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

**சஜீவன் குடும்பத்தினர்**
(கி/ 982)

கோவில் வீதி,
நல்லூர்.